தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-06.

ந.க.எண்.24883/ கே5/ 2024, நாள். .04.2024

பொருள் : தொடக்கக் கல்வி – 2024-25 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவ / மாணவியர்களுக்கு பள்ளிகளில் சமூக நலத்துறையின் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் சீருடைகளுக்கு அளவுகள் எடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது – மாணவர்களின் பெயர்கள் விடுபட்டுள்ளது, - தவறுதலாக உள்ளது போன்ற குறைகளை EMIS இணையதளத்தில் சேர்க்கை / திருத்தம் செய்து பதிவேற்றம் செய்யக் கோருதல் – சார்பு.

பார்வை :

1. அரசாணை நிலை எண்.125, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை (SW7) நாள்.22.07.2004.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு 04.04.2024 அன்று இணையதளம் வாயிலாக வழங்கப்பட்ட அறிவுரைகள்.

------

பார்வை (1)ல் காணும் அரசாணையின்படி, தொடக்கக் கல்வித்துறை மற்றும் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களில் சத்துணவு உண்ணும் மாணவ / மாணவியர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வி மேலாண்மை தகவல் அமைப்பின் (EMIS) மூலம் உருவாக்கப்பட்டுள்ள "App" செயலியில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு உண்ணும் மாணவ / மாணவியர்களுக்கு சீருடைகள் தைத்து வழங்க ID உருவாக்கித்தரப்பட்டு, அதன்படி மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு அருகாமையில் உள்ள சமூக நலத்துறையின் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் நேரில் சென்று பயனாளிகளுக்கு அளவு எடுத்து அதன் விபரத்தை இச்செயலில் பதிவேற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

அவ்வாறு கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் அளவுகள் எடுக்கும் பணிக்கு நேரில் செல்லும்போது அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் விவரம் தவறுதலாக உள்ளதாகவும், சில மாணவர்களின் பெயர் விடுபட்டுள்ளதாகவும், ஒருசில பள்ளிகளில் ஒரு வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் பெயர்களும் விடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களையும் தங்கள் பள்ளியில் பயிலும் மாணவ / மாணவியர்களின் விவரங்களை EMIS இணையதளத்தில் எவ்வித தவறுதல் இன்றியும், எவ்வித மாணவர்களின் பெயர்கள் விடுபடாமலும், பதிவேற்றம் செய்யுமாறு அறிவுரை வழங்க தெரிவிக்கப்படுகிறது. இக்குறைகளை நிவர்த்தி செய்ய ஏதுவாக 05.04.2024 முதல் 08.04.2024 மாலை 4.00 மணி வரை EMIS Portal Openல் இருக்கும் அதற்குள்ளாக அனைத்து விவரங்களையும் சரியாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

08.04.2024க்கு பின்னர் மேற்காண் விவரங்கள் சமூக நலத்துறைக்கு வழங்கப்படவுள்ளது. இதில் ஏதேனும் தவறுகள் பின்னர் கண்டறியப்படின் சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்களே முழு பொறுப்பேற்க நேரிடும் எனவும், திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது. இப்பணியினை செவ்வனே செய்வதற்கு ஏதுவாக அம்மாவட்டத்தில் உள்ள வட்டார வள ஆசிரியர்கள், (BRTEs ) , APOs, DCs ஆகியோர் இப்பணியினை மேற்பார்வை செய்து சரியான விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து சார்ந்த தலைமையாசிரிடமிருந்து சான்று பெற்று அதனை மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (தொடக்கக் கல்வி) அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் அனைத்து விவரங்களையும், சரியாக செய்வதற்கும், எவ்வித சுணக்கமும் இன்றி செய்வதற்கும், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்கும், சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்க அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் (தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு- சான்று.

தொடக்கக் கல்வி இயக்குநர்

5/4/24

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)

# <u>சான்று</u>

2024 - 2025 ஆம் கல்வியாண்டில் ------------------------ மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து அரசு / நகராட்சி / அரசு உதவி பெறும் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் 1முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களில் சத்துணவு உண்ணும் மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்குவதற்கு, அம்மாணவர்களின் பெயர்கள் அனைத்தும் விடுபடாமல் EMIS இணையதளத்தில் எவ்வித தவறும் இன்றி சரியாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என சான்றளிக்கின்றேன்.

மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக் கல்வி)